| | | | |
|---|---|---|---|
| 26.03.2021 | அசல் வழக்கு எண்.198/2018 | வா .சா.1 | திருசண்முகசுந்தரம் த/பெ.சுப்பையன் |

சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதிகள் தரப்பில்)</u>

காலை எண். 747 என்பது 747/1 மற்றும் 747/2 என உட்பிரிவுகள் ஆகிவிட்டது என்றால் சரிதான். 747/2 என்பது தென்வடல் வண்டித்தடம் என்றால் சரிதான். 747 க்கு வடபுறம் 748 காலை இருக்கிறது என்றால், சரிதான். அது வேறு ஒருவருடைய பூமி. அந்த பூமி 1 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் மாதையனுக்கு பாத்தியப்பட்ட பூமியாக இருக்கலாம். அந்த பூமி 748/1 மற்றும் 748/2 என உட்பிரிவுகளாகிவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 748/2 என்பது தென்வடல் வண்டித்தடம் என்றால அது பற்றி எனக்கு தெரியாது. 747/1 சி என்பது எங்களுக்கு பாத்தியப்பட்ட பூமி ஆகும். 747/1 பி என்பது ஒரு ரவிச்சந்திரன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால், சரிதான். 747/1 ஏ என்பது 1ம் பிரதிவாதி ரங்கராஜ்க்கு பாத்தியப்பட்டது. 747/1 சிக்கு வடபுறம் எனக்கு எந்த பூமியும் பாத்தியப்பட்டதில்லை என்றால் சரிதான். வடபுறமுள்ள வண்டித்தடத்தில் எனக்கு உரிமை உள்ளது. 747/2 மற்றும் 748/2 இரண்டும் பொதுவான வண்டித்தடம் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையில் பத்து செண்ட் பூமியை தடத்திற்காக ஒதுக்கப்பட்டதற்கு ஆவணங்கள் எதாவது இருக்கிறதா என்றால், ஆவணங்கள் இல்லை. பட்டா எண். 745 தான் இருக்கிறது. நான் சொல்லும் பட்டா எண்745 ல் வழிப்பாதை காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால், உட்பிரிவு ஆகி வண்டிப்பாதையாக வைத்திருக்கிறோம். என் பிரமாண பத்திரிக்கையில் 747/2 ல் உள்ள வண்டிப் பாதையில் உள்ள உரிமை சகிதம் கிரையம் பெற்றதாக சொல்லியிருக்கிறேன். அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. ஆனால் ஆவணங்கள் இருக்கிறது. நான் கிரையம் பெற்ற பூமியில் ஒரு பகுதியை மாதைய கவுடருக்கு விற்பனை செய்த போது க.ச. 747/2 ல் தடம் உள்ளது என்பதை

**பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் மாமூல் வழிப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கிரையம் பெறும்பொழுதும் மாதைய கவுடருக்கு நான் கிரையம் செய்து கொடுக்கும் பொழுதும் 747/1 என்று உட்பிரிவுகள் ஆகியிருந்தது என்றால் சரிதான். 747 க்கு வடபுறமுள்ள 748 காலை ஒரு பத்திரப்ப கவுடருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

SUB COURT, METTUPALAYAM